தமிழ்ப் புதுக்கவிதைகளில் பெண்ணுரிமை

சு. கிருஷ்ணமூர்த்தி
கவுரவ விரிவுரையாளர், தமிழாய்வுத் துறை
மன்னர் துரைசிங்கம், அரசு கலைக்கல்லூரி,
சிவகங்கை

முன்னுரை

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் தொடர் நிகழ்வுகளான பெண்களின் உரிமை என்பது அடிமை நிலையாகவே இருந்து வருகிறது. எனவே பெண்விடுதலை என்னும் கருத்தோட்டங்களின் தொடர்ச்சியை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தாய்வழிச் சமுதாயத்தில் பெண்கள் பெற்றிருந்த உரிமை வாழ்வு பின்வந்த சமுதாயத்தில் எவ்வாறு பறிக்கப்பட்டது என்பதும் பின்னர் ஏற்பட்ட பல்வேறு புரட்சியின் விளைவாகப் பெண்ணடிமைத்தனம் உணரப்பட்டு அதனைக் களைவதற்கான இயக்கங்கள் எவ்வாறு கட்டமைக்கப்பட்டன என்பது பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெண்ணுரிமை

உரிமை என்பது உலக உயிர்கள் அனைத்திற்கும் பொதுவானதாகும். ஓவ்வொரு உயிரினமும் தான் விரும்புவதைத் தன் விருப்பத்தின்படி செய்யும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது. ஆனால் மனித உயிரினத்தில் சரிபாதியாகக் காணப்படும் ஆணும், பெண்ணும் சமநிலையில் உரிமை பெற்றிருக்கவில்லை. இவ்ஏற்றத்தாழ்வுகள் கல்வி, சமூகம், அரசியல், பொருளாதாரம், கலை, மதம், பண்பாடு போன்ற அனைத்துப் பிரிவுகளிலும் பெண்களின் பங்களிப்பும், உரிமையும் மறுக்கப்படுகின்றன. பெண்களைச் சுரண்டும் ஆணாதிக்கக் கருத்தாக்கம் பால் வேறுபாடின்றி ஆண்களும், பெண்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் சமூகக் கொள்கையாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. எனவே பெண்களை இரண்டாம் நிலையில் வைத்துப் பார்க்கும் ஆணாதிக்கக் கருத்தியலில் இருந்து இருவரும் முற்றிலும் விடுபடுவதே பெண்ணுரிமை எனலாம்.

பல்வேறு செயற்பாடுகளையும் பரிமாணங்களையும் கொண்டவற்றை ஒரு குறிப்பிட்ட வடிவிற்குள்ளோ வரையறைக்குள்ளோ கொண்டுவர இயலாது. இது கவிதைக்கும் பெண்ணுரிமைக்கும் பொதுவான பண்பாகும். கவிதை அவ்வப்போது மனித உணர்வில் புரட்சிகளை ஏற்படுத்துகிறது. கவிதை தொன்று தொட்டு வரும் மதிப்பீடுகளை உடைத்தெறிகிறது. கவிதை மக்களைப் புத்தம் புதிதான உலகைக் காணுமாறு செய்து விடுகிறது. இவ்வகையில் தமிழ்க் கவிஞர்களில் பெண்விடுதலையை முன்னெடுத்துச் சென்ற முன்னோடிகளில் பாரதி குறிப்பிடத்தக்கவராகிறார். இதனை,

> **“மாதர் தம்மை இழிவு செய்யும்**
> **மடமையைக் கொளுத்துவோம்” (பாரதியார் கவிதைகள், ப.355)**

என்று பாரதி தொடங்கி வைத்த பெண்ணுரிமைச் சிந்தனை பின்வந்த கவிஞர்களால் வளர்த்தெடுத்துச் செல்லப்பட்டது என்பதை இக்கவிதையின் மூலம் உணரமுடிகின்றது.

மங்கையர் பிறப்பும் - சிறப்பும்

பெண்களின் பிறப்பு பெருமைப்படத்தக்க ஒன்றெனப் புகழும் நடைமுறையில் பெண்ணாய்ப் பிறந்ததற்கு வருந்தும் கருத்தையும் சுட்டிக்காட்டி அதற்குச் சமாதானமும் கூறிச் செல்கின்றார்.

> **“மங்கையராய்ப் பிறப்பதற்கே - நல்ல**
> **மாதவம் செய்திட வேண்டுமம்மா!**
> **பங்கயக் கைந்நலம் பார்த்தலவோ - இந்தப்**
> **பாரில் அறங்கள் வளருமம்மா!” (கவிமணி, மலரும் மாலையும், பக்.149-150)**

என்று பெண்பிறப்பைப் புகழ்ந்து பாடுகின்றார் கவிமணி. மேலும் பெண்ணின் பிறப்பினைப் புகழ்ந்து பாடும் விதமாகப் பாடுகிறார். இத்தகைய புகழ்ச்சிகளெல்லாம் பிறப்பிடமாய் உள்ளதாகக் கருதப்படும் பெண்கள் தாம் பெண்ணாய்ப் பிறந்த நிலைக்கு ஏன் வருந்த வேண்டும் என்ற வினாவிற்கு

விடைகாண முற்பட்டால் நடைமுறை உண்மையிலிருந்த கவிதைகள் சற்று விலகியிருப்பது விளங்கும். பெண்களுக்கு ஏற்பட்டிருக்கும் வருத்தத்திற்கு மருந்தாக இத்தகைய புகழ்ச்சிகள் அமைகின்றன எனலாம். மேலும் அவர்,

“செம்மையிற் பெற்ற குணங்களெல்லாம் - நீங்கள்
செய்வினையாலே திருத்துவீரேல்
இம்மைக் கடன்கள் முடித்திடவே - முக்தி
எய்திச் சுகமாயிருப்பீரே” (கவிமணி, மலரும் மாலையும், ப.150)

என்று பாடி நிறைவு செய்கிறார். பெண்ணாய்ப் பிறந்து பல இடர்களுக்கு ஆளாகித் துன்புற நேர்ந்ததே என்று வருந்தாமல் பெண்களுக்கு மறுமை இன்பத்தைக் காட்டி, இம்மையில் சகிப்பத்தன்மையோடு இருக்க வேண்டுமென அறிவுரை கூறுகின்றார்.

தாய்மைச் சிறப்பு

பெண்களைப் போற்றிப்பாடும் கவிஞர்கள் பெண்களிடம் உள்ள தாய்மைப் பண்பைச் சிறப்பித்துப் பாடுவதில் நிறைவு அடைகின்றனர். ஒரு பெண் தாயாக நின்று தன் குழந்தைக்கு ஆற்றும் செயல்களையெல்லாம் ஒரு குழந்தையின் நிலையில் இருந்து பட்டியலிடும் கவிஞர் இறுதியில்,

“உன்னைப் போல வளர்த்திடவே
உலகில் உண்டோ வேறொருவர்
என்னைக் காக்கும் அம்மாவே
எனக்குத் தெய்வம் நீதானே” (வள்ளியப்பா, அழ., மலரும் உள்ளம், பக்.49-50)

என்று குழந்தை கூறுவதாக அமைத்துள்ளார். குழந்தை முதலே தாயைத் தெய்வமாகப் பார்க்கக் கூடிய மனநிலையை வளர்க்க இத்தகைய கவிதைகள் பயன்படுகின்றன. பிள்ளை வளர்ப்பு என்னும் பெரும்பொறுப்பை நிறைவேற்றும் தாய் தெய்வமாகப் போற்றப்பட வேண்டியவள் என்று போதிப்பதன் மூலம் பெண்ணடிமைக் கொடுமைகள் மறையக்கூடும் என்று கவிஞர்கள் கருதினர். ஆனால், பெரும்பங்கான குடும்பக் கடமைகளை ஆற்றும் பெண்ணைத் தெய்வமெனப் போற்றிப் பாராட்டுவதோடு மனநிறைவு கொண்டுவிடும்போக்கே இன்று அனைவரிடமும் காணப்படுகிறது.

பெண் அடிமையில்லை

பெண் என்பவள் தாயாக, மனைவியாக, மகளாக இருந்தபோதிலும் ஒரு பெண் என்ற மதிப்பீட்டில் அடிமையாகவே கருதப்படும் போக்கு உள்ளது. உளவியல் அடிப்படையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இத்தகைய மனப்போக்கு அடிமனதில் உள்ளது என்பதை,

“கண்களும் ஒளியும் போலக்
கவின்மலர் வாசம் போல
பெண்களும் ஆண்கள் தாமும்
பெருந்தமிழ் நாடு தன்னில்
தண்கடல் நிகர்த்த அன்பால்
சமானத்தர் ஆனார் என்ற
பண்வந்து காதிற் பாய
பருகுநாள் எந்த நாளோ?” (பாரதிதாசன் கவிதைகள், ப.81)

என்று பாடும் பாரதிதாசன், ஆணும் பெண்ணும் சமம் என்ற உணர்வைப் பெறுவதே இச்சிக்கலுக்குத் தீர்வு என்கிறார். கண்களும் ஒளியும், மலரும் மணமும் எப்படி இயல்பாக உள்ளதோ அதுபோல ஆணும், பெண்ணும் சமஉரிமையோடு இணைந்திருப்பதே இயல்பானது என்கிறார். ஏற்றத்தாழ்வு கற்பிப்பதே இயல்புக்கு மாறானது என்பதும் அறியத்தக்கது. இதையே ‘ஆணுக்குப் பெண் அடிமையில்லை’ என்று கூறுவதன் மூலம் உறுதிப்படுத்துகிறார்.

ஆவதும் பெண்ணாலே

‘ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே’ என்ற பழமொழி வழங்கிவருவதைக் காணலாம். இதுபோன்ற பழமொழிகள் பெண்களைத் தாழ்வு மனப்பான்மையில் வைத்திருக்கவே பயன்படுவதும் கண்கூடு,

“தீரர் விளைவதும் பெண்ணாலே - கலைச்
செல்வம் செழிப்பதும் பெண்ணாலே
பாரில் அழகும் சுவையும் அமுதும்
பரந்து தழைப்பதும் பெண்ணாலே’’ (சுத்தானந்தபாரதி, உலகப்பாட்டு, ப.73)

எனும் கவிதை, பெண்ணடிமைச் சமுதாயத்தில் கூடப் பெண்கள் எத்துணை சக்தி வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்று பாராட்டுவது போல அமைந்திருந்தாலும் இங்கு கலையும் அழகும் சுவையும் பெண்களால் தழைத்து வளர்வதாகப் பாடியிருப்பது கவனிக்கத்தக்கது. தீரர்களைப் பெற்று உருவாக்குவதும், கலையாலும் அழகாலும் சமூகத்திற்கு இன்பம் அளிப்பதும் பெண்களால் முடியும் என்பது போலப் பேசும் இக்கவிதை பெண்ணின் பெருமை பற்றிப் பேசுகிறது என்பதை உணர்த்துகின்றது.

பெண் கல்வி

‘கல்வியில்லாத பெண்கள் களர்நிலம்’ என்ற பாரதிதாசனின் வரி, கல்வியறிவு பெற்ற பெண்களைத் திருந்திய கழனி என்றழைத்து அங்கேதான் நல்லறிவுடைய மக்கள் எனும் நெல்மணிகள் விளைய முடியும் என்று பொருள் கூறுகிறார். கல்வியானது இருபாலருக்கும் பொதுவானது. ஆனாலும் பெண்ணுக்குக் கல்வி ஆயுதம் என்று கூறும் கவிஞர் அறிவை விரிவாக்கும் கருவி கல்வியே எனும் வள்ளுவரின் கருத்தையொற்றி,

“அடிமை விலங்கை
உடைத் தெறியும்
ஆயுதம் உங்கள்
கல்வியே’’ (ஹசீனாபர்வீன், ஹெச், ஜி., வைகறைக் கோலம், ப.24)

என்று பெண்கல்வியின் பெருமை பற்றிப் பேசுகிறார் கவிஞர். இவ்வாறு பெண்கல்வியின் அவசியத்தை உணர்ந்த பொற்கோ,

இனிக் கல்லாத பெண்ணில்லை கல்வி நமதென்று
கைகொட்டிப் பாடி அடியுங்கடி (பொற்கோ, பொற்கோவின் கவிதைகள், ப.34)

என்று பெண்கல்வியின் மேன்மையைப் பாடுகிறார் கவிஞர். இவர் வீட்டைக் கவனித்து வீட்டுக்கரசியாய் விளங்கும் பெண்குலம் நாட்டுக்கு அரசாகவும் விளங்க வேண்டும் என்று பாடி கல்லாத பெண்களையும் கல்வி கற்கத் தூண்டுகிறார். கல்வி கற்றால்தான் பெண்கள் தங்களுக்கான உரிமைகளைப் பெற்று அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்க முடியும் என்று மேற்கண்ட கவிதைகள் உணர்த்தி நிற்கின்றன.

பெண் விடுதலை

பெண்ணடிமை ஏற்பட்ட சூழலைப் புரிந்து பெண்விடுதலைக்கான சூழலை ஏற்படுத்த வழிகாட்டும் கவிதைகளும் பரவலாகக் காணப்படுகின்றன.

“நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்’’ (குறள்.948)

என்று கூறுகிறார் திருவள்ளுவர். பெண்ணடிமை என்னும் நோய்க்கு மூலகாரணியாக விளங்குவனவற்றை உய்த்தறிந்து அதனைக்களைய பெண்களை நெறிப்படுத்த வேண்டும் என்பதை,

“கல்வியில் விடி
அரசியல் தெளி
சட்டங்கள் செய்
ஊர்வலம் போ
முழக்க மிடு
பெண்ணைப் பேசப்
பெண்ணே எழு’’ (அறிவுமதி, அறிவுமதி கவிதைகள், ப.165)

என்று கூறும் அறிவுமதியின் கவிதை வரிகள், பாரதியின் அடியொற்றி பெண்ணடிமைக்கான காரணங்களைக் கண்டறிந்து பெண்ணுரிமைக்கான வழிமுறைகளை எடுத்துரைப்பதாக அமைகின்றது.

பெண்ணிய ஊன்றுகோல்

ஆணும், பெண்ணும் இணைந்தே இருக்கும் இச்சமூகத்தில் இருபாலருக்கும் இரு வேறு மதிப்பீடுகள் நிலவி வருவதைக் காணமுடிகின்றது. ஆண் குழந்தையைப் பற்றிப் பெருமிதம் கொள்ளும் மனம் பெண்குழந்தையை ஒரு சுமையாகக் கருதுகிறது. பெண் திருமணம் முடிந்து புகுந்த வீட்டிற்குச் சென்று விடுவதால், பெற்றோருக்கு ஊன்றுகோலாக ஆண் மகன் இருக்கின்றான் என்ற காரணத்தால் மரபு வழியாகவே ஆண் குழந்தை வரவேற்பிற்கு உரியதாகக் கருதப்படுகிறது என்பதை,

“அன்னை வயிற்றில் பிறந்த எனக்கு
நெஞ்சில் பிறந்த பிள்ளை
நீ….நெஞ்சில் பிறந்த பிள்ளை
திசுப்பைக்குள் சிசுவாய்
கருக்கொண்டு உருக்கொண்டு
வளர்ந்தவள் நான்
கண்ணுக்குள் வளர்வது நீ!
கருத்துக்குள் ஒளிர்வது நீ! நீ! நீ!
சொல்வது ‘பைத்தியம்’
சொல்லாமல் கொல்வது நித்தியம்
இருந்தும்
சத்தியம்
உனக்கு நான்கால்
எனக்கு நீ கோல்” (மீனாட்சி, இரா., மீனாட்சி கவிதைகள், ப.47)

என்று மீனாட்சி தன் கவிதையின் மூலம் சித்தரித்துக் காட்டுகிறார்.

பெண்களின் உரிமைகள் தழைக்கவும், பெண் விடுதலை நிறைவேறவும் பெண்களின் சமூக மதிப்பு உயரவும், ஆண்களின் ஆதரவு அவசியம். ஒவ்வொரு ஆணும் பெண்ணின் வாழ்க்கைப் பாதையில் துணையாகப் பயணம் செய்தால் பெண்ணியம் வெற்றி பெறும் என்பதை,

“வாழ்க்கைச் சதுரங்கத்தில்
உன்னை வெட்டியபடி
முன்னேறியவர்கள் நாம்
நாமே நீ இட்ட பிச்சைதான்
ஆனால் உன்னை
எங்கள் வாசலில் கையேந்தும்
பிச்சைக்காரி ஆக்கினோம்.
தாய்மைக்காகச் சமைபவளே!
உன் சதையைத் தின்னு
பசியாறும் கழுகுகள் நாம்
இலக்கணங்கள் உனக்கு வற்புறுத்தினோம்
நாம் வழுஅமைதிகளாக இருந்தோம்
நீ உன்னை விற்றால் அது விபச்சாரம்
நாம் எங்களை விற்றால்
அது திருமணம் என்றோம்” (அப்துல் ரகுமான், ஆலாபனை, ப.9)

என்ற வரிகளைப் பெண்ணியத்திற்குத் துணையாக ‘ஆலாபனை’ என்னும் கவிதையில் அப்துல் ரகுமான் புலப்படுத்தியுள்ளார். பெண்களை அழவைக்காமல், ஆளவைக்கும் ஆண்கள் கூட்டம் உதயமாக வேண்டும். அப்போதுதான் பெண்ணியம் விடியும் என்பதை இக்கவிதை உணர்த்துகின்றது.

பெண்ணுரிமையே மண்ணுரிமை

பெண்களை உயர்வாகக் கருதும் போக்கும் குடும்ப விளக்காகப் போற்றிப் பாதுகாப்பதே அந்த உயர்வை அவர்களுக்கு வழங்கும் என்ற எண்ணப்போக்கும் மண்ணில் வழங்கி வந்திருக்கிறது.

இதனைக் கண்டறிந்த கவிஞர்கள் பெண்களின் முழுஉரிமை என்பது எட்டப்படாத நிலையில்தான் இன்னும் இருக்கிறது என்பதையும் கண்டறிந்தனர். கல்விக் கடவுளாகப் பெண்ணைப் படைத்துப் பார்த்த மண்ணில் அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்ற பழமொழியும் உலவுவதை உணர்ந்த கவிஞர்கள் இந்நிலை மாறத் தம் எழுதுகோலைத் தாராளமாகவே பயன்படுத்தி வந்துள்ளனர்.

"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே
ஊமையென்று பெண்ணை உரைக்குமட்டும் உள்ளடங்கும்
ஆமை நிலைதான் ஆடவர்க்கும் உண்டு" (பாரதிதாசன் கவிதைகள், ப.44)

என்று கூறும் பாரதிதாசன் விடுதலை என்பதற்கான முழுப்பொருளையும் விளக்குகிறார். நாட்டுக்கு வந்துவிட்டதாகச் சொல்லப்படும் சுதந்திரம் பெண்ணுரிமை இல்லாமல் நிறைவடையாது என்பதையும், ஒரு பாதியாய் இருக்கும் பெண்களை அடிமையாய் வைத்திருக்கும் ஆணாதிக்க உலகம் உள்ளவரை அடிமைப்பட்ட பெண்கள் உள்ளவரை மானுட வாழ்வு முழுமையடையாது என்பதையும் தெளிவாகக் கூறுகிறார்.

பெண்ணின் போர்க்குணம்

'பழையன கழிதலும் புதியன புகுதலும்' எனும் நன்னூலாரின் கூற்று, பழமை போக்கிப் புதுமை விளைவிக்க வேண்டுமெனில் பெண்களுக்குப் போர்க்குணம் தேவை என்று கூறுவதை,

"புண்ணான பழமைகளைப்
போக்கிநற் பயிர்விளைக்கப்
போர்க்குணம் வேண்டுமடி தோழி - இனிப்
போர்க்குணம் வேண்டுமடி தோழி" (பொற்கோ, பொற்கோவின் கவிதைகள், ப.39)

என்று கூறும் இவ்வரிகள், பொறுமைக் குணத்தில் புதைந்து கிடக்க வேண்டும் என்று காலம்காலமாகக் கற்பிக்கப்பட்ட பெண்களுக்குப் போர்க்குணம் தேவை என்பதையும் உணர்த்துகின்றது. மேலும், பெண்ணுரிமைக்காண போர்க்குணம் குறித்துக் கூறவந்த கவிஞர்,

"நீ
பட்டுக்கும் ஜரிகைக்கும்
மனத்தை அலைபாய விடுபவள் அல்ல!
போருடை அணிந்து
புறப்பட வேண்டியவள்" (இளையபாரதி, விசாரணைகள், ப.79)

என்ற கவிதை, பெண்களைப் போர்வீரர் தோற்றத்தில் காண முற்படுவதை அறியமுடிகின்றது. இவ்வாறு இன்றைய கவிஞர்கள் பெண் விடுதலைக்காகவும், பெண்ணுரிமைக்காகவும் அப்பெண்கள் வெளிப்பட வேண்டும் என்றும் பட்டாடை விடுத்துப் போருடை உடுத்தப் புறப்பட வேண்டும் என்றும் அழைப்பு விடுப்பதை கவிஞர்களின் கவிதைவழி அறியமுடிகின்றது.

முடிவுரை

புதுக்கவிதையின் புதிய பரிமாணங்களில் ஒன்று பெண்ணியம். இன்று கவிஞர்கள் பலரும் தனது கவிதையின் பாடுபொருளாகப் பெண்ணியத்தைக் கையாளுகின்றனர். இன்றைய பெண்களின் வளர்ச்சி நிலை குறித்தும், பெண்களுக்கான உரிமைகளை நிலைநாட்டியும், தமிழ்ப் புதுக்கவிதையின் வழி பல்வேறு படைப்புகள் எழுந்த வண்ணம் உள்ளன. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக அடிமைப்படுத்தப்பட்ட பெண்ணினம் இன்று அவர்களுக்கான உரிமைகளை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளமை பாராட்டுதற்குரியது. இவ்வாறு பெண்கள் கல்வி, மதம், கலை, சமூகம், பண்பாடு, பொருளாதாரம், அரசியல் என்று அனைத்துத் துறைகளிலும் தங்களுக்கான உரிமைகளை மீட்டுத் தாங்களே வெற்றி கண்டுள்ளதை தமிழ்ப் புதுக்கவிதைகளின் வழி அறியமுடிகின்றது.